## மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்திற்கு

# நிலம் கையகப்படுத்தும் பணிகள் தீவிரம்

சென்னை, மார்ச் 3: இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிலம் கையக்கப்படுத்தும் பணியை மெட்ரோ ரயில் நிர்வாகம் தீவிரப்படுத்தியுள்ளது. இதற்காக மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயிலில் டி.எம்.எஸ் - வண்ணாரப்பேட்டை இடையேயான 10 கி.மீ தூரத்திற்கான வழித்தடம் கடந்த மாதம் 10ம் தேதி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொண்டுவரப்பட்டது.

இதனால் 45 கி.மீ தூரத்திற்கான முதல் கட்ட மெட்ரோ திட்டம் முடியப்பெற்று தற்போது செயல்பாட்டில் உள்ளது. இதையடுத்து, மெட்ரோ ரயில் சேவையை சென்னை மாநகரம் முழுவதும் விரிவுபடுத்தும் நோக்குடன் அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. 2ம் கட்டமாக 118.9 கி.மீ தூரத்திற்கு ₹85,047 கோடி செலவில் மாதவரம்-சிப்காட், கோயம்பேடு- கலங்கரை விளக்கம், மாதவரம்- சோழிங்கநல்லூர் இடையே அமைக்கப்பட உள்ளது.

இதற்கான நிலம் கையக்கப்படுத்தும் பணியானது கடந்த ஆண்டு தொடங்கியது. மெட்ரோ ரயில் வழித்தடங்களில் உள்ள வீடுகள் மற்றும் கடைகளின் உரிமையாளர்களுக்கு மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில் நோட்டீஸ் வழங்கப்பட்டது. மெட்ரோ ரயில் விரிவாக்க பணிக்காக இடங்களை வழங்கவும் அறிவுறுத்தப்பட்டது.

இதற்கு அடுத்தபடியாக, 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின் 4ம் வழித்தடத்திற்காக மதுரவாயல் மற்றும் போரூர் கிராமங்களில் உள்ள பகுதிகளை மெட்ரோ ரயில் திட்டத்திற்காக கையகப்படுத்தும் பணியில் மெட்ரோ ரயில் நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

இதேபோல், ஆலப்பாக்கம் ஜங்சன் மெட்ரோ ரயில் நிலையத்திற்கான தொழிலியல் நோக்கங்களுக்காக கையப்படுத்தப்பட உள்ளது.

மேலும், மாம்பலம் வட்டம், சாலிகிராமம் மற்றும் கோடம்பாக்கத்தில் அமைந்துள்ள பகுதிகள் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம் பல்லாவரம் வட்டம் ஐப்பன்தாங்கல் மற்றும் தென்னியார் அகரம் பகுதிகளில் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. ராமச்சந்திரா மருத்துவமனை மெட்ரோ நிலையத்திற்காக தொழிலியல் நோக்கங்களுக்கு நிலம் எடுப்பதற்கும் நிர்வாகத்தின் சார்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதேபோல், சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள், பொது அறிவிப்பு வெளியான 30 நாட்களுக்குள் ஆட்சேபனை இருப்பின் அந்தந்த வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் நில எடுப்பு அலுவலர் அலுவலகத்தில் பதில் அளிக்க வேண்டும் என நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.